# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No. 380/2022

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW-1 |
| Name | : ராஜசேகர் |
| Father/Husband's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 30.09.2024.

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி—**

நான் எதிரிக்கு Work Order—ன் படி ரூ. 1 கோடியே , 54 இலட்சம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. ரூ. 92,00,000/—தான் எதிரியிடம் கொடுத்தேன். நான் மொத்தமாக எதிரியிடம் ரூ. 1 கோடியே , 54 இலட்சம் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 4 வது பத்தியில் திருத்தப்பட்ட பணி ஆணையின்படி நான் எதிரிக்கு ரூ. 1 கோடியே , 54 இலட்சம் கொடுத்துள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலும் கட்டட பணி அப்ரூவலுக்காக நான் எதிரிக்கு ரூ. 1 கோடியே , 54 இலட்சம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் என்னிடம் எதிரி 13.01.2021 தேதியிட்ட கடன் உறுதிப்பத்திரம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இந்த வழக்கில் இல்லை. வேறு ஒரு வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்தில் எதிரியின்மீது மேற்படி வழக்கை தொடர்ந்துள்ளேன். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தில் மேற்சொன்ன வழக்கின் விவரத்தை சொல்லவில்லை. அதே வழக்கறிஞர் அறிவிப்பில் பத்தி 3–ல் எதிரி 21.02.2021 ஆம் தேதி காசோலை எண் 002845 ரூ.25 இலட்சத்திற்கான காசோலையை என்னிடம் கொடுத்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். 28.08.2021 ஆம் தேதி இந்த வழக்கின் காசோலையை எதிரி என்னிடம் கொடுத்தார். இந்த வழக்கின் காசோலை எண் 002823 என்றால் சரிதான். 21.02.2021 ஆம் தேதி கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ள காசோலையின் முந்தைய காசோலைதான் 28.08.2021 ஆம் தேதி கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் இருக்கலாம். 21.02.2021 ஆம் தேதி கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் காசோலையை நான் என் வசம் வைத்துள்ளேன். அதனை நான் வங்கியில் இன்றைய நாள் வரை செலுத்தவில்லை.

திருத்தப்பட்ட பணி ஒப்பந்த Work Order– யை நான் இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. ஏனென்றால் இந்த வழக்கானது காசோலை மோசடி வழக்கு என்பதனால் தாக்கல் செய்யவில்லை. நான் எதிரியிடம் எந்த நேரத்தில் Joint Venture Agreement போட்டேன் என்றால் 01.11.2020 ஆம் தேதி ஆகும். மேற்படி Agreement– யும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. எதிரியுடன் நான் போட்டுக்கொண்ட Joint Venture Agreement–யை 2 மாதங்களுக்கு முன்பு ரத்து செய்தேன். மேற்படி ரத்து செய்த ஆவணம் தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படுவதுதான். மேற்படி **ஆவணத்தின் அசல் எதிரி தரப்பில் எ.ம.சா 1 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தின் Arbitration Clause –யை பற்றி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

18.12.2021 ஆம் தேதி சட்ட அறிவிப்பை எதிரி எனக்கு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த **சட்ட அறிவிப்பின் அசல் எ.ம.சா 2 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. அந்த அறிவிப்பின்மீது நாங்கள் பதில் அறிவிப்பு தெரிவிக்கவில்லை.

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.**

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.